**தலைப்பு – 175 அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி மற்றும் 2 ஆம் பந்தியில் அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தியிலிருந்து ஒவ்வொரு தலைப்பிற்கும் உரித்தான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 30 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்

பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாட்டுத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஓதுகீட்டுக் கணக்கு**

**2.2 மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 1,419.21 மில்லியன் தொகையானதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 1,394.20 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி, 25.01 மில்லியன் அதாவது தேறிய ஏற்பாட்டில் 1.76 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழும் | 93.18 | 81.41 | 11.77 | 12.63 |
| மூலதனம் | 1,326.03 | 1,312.79 | 13.24 | 1.00 |
| கூட்டுத்தொகை | **1,419.21** | **1,394.20** | **25.01** | **1.76** |

**2.3 முற்பணக் கணக்குகள்**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாரளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்கு உரித்தான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவு<br>ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | பெறுவனவு<br>ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | வரவு மீதி<br>ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 17501 | 4.50 | 2.86 | 1.50 | 2.59 | 20.00 | 9.78 |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கின் மீதி ரூபா 2.06 மில்லியன் ஆகும்.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் படி, அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்று மேலே 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகளில் போதியளவானதும் முக்கியமானதுமாக அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 3. ஒதுக்கீட்டுத் தலைப்பு 175 – அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

---

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 900,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 03 செலவின விடயங்களுக்கு ரூபா 4,436,838 தொகையான மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்துள்ள சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 77 சதவீதம் முதல் 87 சதவீதம் வரையான வீச்சைக் கொண்டிருந்தது.

### 3.2 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களுக்கு மேற்பட்ட (காணி வைப்புக்கள் தவிர்ந்த) ரூபா 139,924 கூட்டுத்தொகையான இரு வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

17501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்கான 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அன்றைய தினத்தில் இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 739,594 தொகையான கடன் மீதி 6 மாதங்கள் முதல் 03 ஆண்டுகள் வரையான காலமாக நிலவிய

போதிலும் அக் கடன் மீதியை அறவிடும் பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) அமைச்சால் கடன் செலுத்தப்படுகையில் பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகள் பின்பற்றப்படாது ரூபா 483,145 தொகையான இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) ஏனைய நிறுவகத்திடம் இருந்த சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்படல்**

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையிடம் காணப்பட்ட ஓர் வாகனம் முறையான அங்கீகாரம் இன்றி தேசிய தோட்ட முகாமைத்துவ அபிவிருத்தி அமைச்சு மற்றும் அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் 2009 ஏப்ரல் 08 ஆம் திகதி முதல் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

அமைச்சால் 2014 திசெம்பர் 31 வரையில் 1 ஆண்டிற்கு குறைவான தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 1,216,920 ஆகக் காணப்பட்டது.

**3.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுத் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | |
| | நிதிப் பிரமாணம் 104(1) | 249,296 | 04 வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நட்டம் நிர்ணயிக்கப் பட்டு அதற்குப் பொறுப்பான தரப்பினரை இனங்காண்பதற்காக 3 மாதங்கள் முதல் 9 மாதங்கள் வரையான கால வீச்சிலான தாமதத்துடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | 52,224 | வழங்கப்பட்டு எனினும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத 06 மாதங்களிற்கு மேற்பட்ட காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3.6 செயலாற்றல்

2014 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தின் படி, அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

### (அ) பிரதான பணிகளிற்கு மாறான செயற்பாடுகள்

அமைச்சு தனது நோக்கங்களிற்கு உரித்தான செயற்பாடுகளிற்கு மாறாகச் செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவ்வாறு கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

(i) அமைச்சின் கீழ் உள்ள 22 நிறுவனங்களை வர்த்தக ரீதியாக ஆக்கபூர்வமான நிறுவனமாக்குவதற்கு தவறியமை.

(ii) அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் ஊழியர் சம்பளங்கள், நிலுவைப் பணிக்கொடை மற்றும் சேமலாப நிதியக் கொடுப்பனவுகள் போன்ற மீண்டெழும் தன்மையிலான செலவினங்கள், மூலதன ஏற்பாடுகளின் கீழ் செலவிடப்பட்டிருந்தன.

**3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------

அமைச்சால் மேற்கொள்ளப்பட்டிருந்த முறையற்ற தன்மையிலான சில கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறாகும்.

**(அ) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டியின் நடைமுறையிலிருந்து விலகுதல்**

-----------------------------------------------------------------------------------------------------------------

அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டலின் 3.4 ஆம் வழிகாட்டலின் படி, ஆகக் குறைந்தது மூன்று நிறுவகங்களிடம் இருந்து விலைக் கோரல்கள் கோரப்பட வேண்டிய போதிலும் ஒரு நிறுவனத்திடம் இருந்து மாத்திரம் விலைக் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 619,103 பெறுமதியான தளபாடங்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**(ஆ) மையவிலக்கு தொழிற்சாலை வாடகைக்கு வழங்கல்**

---------------------------------------------------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாவனெல்லவில் உள்ள மையவிலக்கு இறப்பர் தொழிற்சாலை வாடகைக்கு வழங்கப்படுவதற்கான விருப்பைத் தெரிவிப்பதற்கு 2011 மார்ச் 05 ஆம் திகதி அழைப்பு விடுக்கப்பட்டிருந்ததுடன் அவை மதிப்பிடுகையில் விருப்பைத் தெரிவித்த நிறுவனங்களில் முதலீட்டுப் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு புள்ளி வழங்கப்படுகையில் அந் நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்கள்

முறையாக பகுப்பாய்வு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) வைப்புத் தொகைக்காக புள்ளி வழங்கப்படுகையில் வைப்புத் தொகை குறிப்பிடப்பட்டிராத நிறுவனத்தின் வைப்புத் தொகை ரூபா 60 மில்லியன் தொகையாக மதிப்பீட்டுப் பத்திரங்களில் போலியாகக் குறிப்பிடப்பட்டு புள்ளி வழங்கப்பட்டிருந்தது.

**(இ) அமைச்சருக்கு உத்தியோகபூர்வ விடுதிகள் வழங்கப்படல்**

அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரால் 2 ஆண்டுகளுக்கு மேலான காலமாக 2 உத்தியோகபூர்வ விடுதிகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**3.8 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட சிக்கனமின்றி ஏற்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(அ) பாடசாலை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்காக அப்பியாசக் கொப்பிகள் கொள்வனவு செய்கையில் ஆகக் குறைந்த விலை கருத்திற்கொள்ளப்படாது அமைச்சின் கீழ் உள்ள நிறுவகத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு அந் நிறுவனம் கொப்பிகள் அச்சிட்டிராமையால் ரூபா 75,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) மாவனல்லவில் உள்ள டயர் மற்றும் ரியூப் தொழிற்சாலையில் இயந்திரங்கள் வாடகைக்கு வழங்கப்படுவதற்காக அரசாங்க மதிப்பீட்டைப் பார்க்கிலும் குறைவான விலை மனு பெறப்பட்டதன் காரணமாக இயந்திரங்கள் கழற்றி விற்பனை செய்யும் அடிப்படையில் மீள மதிப்பீட்டு அறிக்கை ஒன்று பெறப்பட்டு இயந்திரங்கள் விற்பனை செய்ததன் காரணமாக ரூபா 66 மில்லியன் பெறுமதியான இயந்திரங்கள் ரூபா 22 மில்லியன் தொகைக்கு 2012 மார்ச் 14 ஆம் திகதி விற்பனை செய்யப்பட்டிருந்தன.

**3.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 19 | 16 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 56 | 32 | 24 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 36 | 33 | 03 | - |
| (v) | ஏனையவை | - | 01 | - | 01 |
| | மொத்தம் | 114 | 84 | 31 | 01 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சேர்க்கப்பட்டிருந்த மிகையான உத்தியோகத்தருக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.